TNVR150002702024
Presented on : 08-02-2024
Registered on : 26-03-2024
Decided on : 12-06-2026
Duration : 2 years, 4 months, 4 days

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : செல்வி.D.ஜெயபிரதா, B.A.,B.L., (Hons)**

**நீதித்துறை நடுவர், அருப்புக்கோட்டை**

**2026 -ம் வருடம் ஜுன் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 61/2024**

******

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
கீழபரளச்சி காவல் நிலையம்,
குற்ற எண். 82/2023
பிரிவுகள். 341, 294(b), 323, 506(ii) இதச

... புகார்தாரர்

**-எதிர்-**

1. வேலு, 38/2026
த.பெ. முனியசாமி,
கீழ்க்குடி, அருப்புக்கோட்டை தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.

2. சசிக்குமார், 25/26,
த.பெ. மாதவன்,
கீழ்க்குடி, அருப்புக்கோட்டை தாலுகா.
விருதுநகர் மாவட்டம்.

... எதிரிகள்

## வழக்கு விசாரணை விவரங்கள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021-ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | இவ்வழக்கில் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 41A சம்மன் 28.09.2023 ம் தேதி சார்பு செய்யப்பட்டது. கைது இல்லை. |
| ii. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 29.02.2024 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்ட பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 04.01.2025 |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | U/S. 320 Crpc ன் கீழ் 03.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>U/S. 311 Crpc ன் கீழ் 09.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>U/S. 294 Crpc ன் கீழ் 09.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே அனுமதிக்கப் பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 03.06.2026 | 03.06.2026 |
| | | | அ.சா.2 | 09.06.2026 | 09.06.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 11.06.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | இல்லை | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106(1)-ன் படி விபரங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.எண். | : | CC61/2024 |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | கீழபரளச்சி காவல் நிலைய குற்ற எண். 82/2023 |

3. **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | 1. வேலு, 38/2026<br>த.பெ. முனியசாமி, |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கீழ்க்குடி, அருப்புக்கோட்டை |

| | | | |
|---|---|---|---|
| | தொழில் | : | தாலுகா, விருதுநகர் மாவட்டம். |
| | இருப்பிட முகவரி | : | 2. சசிக்குமார், 25/26, த.பெ. மாதவன், |
| | வயது | | கீழ்க்குடி, அருப்புக்கோட்டை தாலுகா. விருதுநகர் மாவட்டம். |

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 17.09.2023 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 18.09.2023 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | 41A- Cr.P.C சம் மன் - 28.09.2023 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 41A- Cr.P.C சம் மன் 28.09.2023 |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 03.06.2026 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 11.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 12.06.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |

இவ்வழக்கானது கடந்த 26.03.2024 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 11.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1, அருப்புக்கோட்டை திரு.V. செந்தில் குமார், அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சுப்பையா, M.com, B.L., அவர்கள் முன்னிலையாகியும், செய்த வாதங்களையும் கேட்டறிந்து, சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்ருமாறு

இவ்வழக்கில் புகார்தாரர் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் 17.09.2023 ம் தேதி பகல் 13.00 மணியளவில் புகார்தாரர் அவர் வீட்டிற்கு நடந்து போய்க்கொண்டிருக்கும்போது மேற்படி முன்விரோதத்தை வைத்துக்கொண்டு அங்கு கையில் கட்டை மற்றும் கம்புகளுடன் போன 1மற்றும் 2 எதிரிகள் புகார்தாரரின் வீடு அருகே வைத்து புகார்தாரரை வழிமறித்து புகார்தாரரை பார்த்து தேவிடியா மகனே தாயோழி மகனே என்று அசிங்கமாக பேசியதாகவும், அப்போது புகார்தாரர் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கோபமடைந்த 1வது எதிரி வேலு கட்டைகம்பால் புகார்தாரரின் இடது பக்க கழுத்திலும், இடது கை மணிக்கட்டிலும், அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 2 வது எதிரி சசிக்குமார் புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு வயிற்றில் மிதித்து கையால்

முதுகில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும், பின்னர் எதிரிகள் இருவரும் கையில் வைத்திருந்த கம்பு மற்றும் உருட்டு கட்டைகளை புகார்தாரர் முன்னாடி காட்டி இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்ன கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு மீண்டும் அவர்கள் கீழே கிடந்த பெரிய கற்களை எடுத்துக்கொண்டு நாங்க அடிச்சத போலீசுல சொன்ன கல்லை உன்மேல போட்டு உன்ன கொன்டுவிடுவோம் என்று அவருக்கு கொலைமிரட்டல் செய்து உயிர்பயம் ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின் கீழ் கீழபரளச்சி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு கோப்பிற்கு எடுத்த உத்தரவு**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்ளை பரிசீலனை செய்ததில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையானதும் வழக்காவணங்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனையதல்**

போதிய கால அவகாசம் கொடுத்து எதிரிகளிடம் குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள்

இருந்ததாலும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973-ன் பிரிவு 240 (1) படி 1 மற்றும் 2 எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் 1860-ன் **சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின்** கீழ் குற்றச்சாட்டு வனைந்து குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 240(2) ன் படி எதிரிகளுக்கு தமிழில் விளக்கிக் கேட்டபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துள்ளதால் குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 242 ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்**

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 கருப்பையா அவரது சாட்சியத்தில் கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அப்போது கூட்டமாக அனைவரும் கூடிவிட்டார்கள் என்றும், கூட்டத்தில் யாரோ அவரை தள்ளிவிட்டதில் அவர் கீழே விழுந்து இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் தான் அவரை தள்ளிவிட்டார் என்று நினைத்துக்கொண்டு எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும், பின்னர் எதிரிகள்

அவரை தாக்கவில்லை என்று தெரிந்து கொண்டதாகவும், எதிரிகளுக்கும், அவருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானம் ஆகிவிட்டதாகவும், புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், கோபத்தில் அவ்வாறு புகார் கொடுத்துவிட்டதாக அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அ.சா.2. தமிழ்மோகன் ( சிறப்பு சார்பு ஆய்வாளர்) அவரது சாட்சியத்தில், கடந்த 18.09.2023 ம் தேதி சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1. கருப்பையா நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 82/2023 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், பின்னர் இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என்பதும், முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ள 6 எதிரிகளில் இவ்வழக்கின் எதிரிகளான வேலு, சசிக்குமார் ஆகியோர்களை தவிர மற்ற நபர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் மேற்படி எதிரிகளை வழக்கில் இருந்து நீக்கம் செய்து, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளில் 147 நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை தயார்

செய்ததாகவும், பின்னர் 03.11.2023 ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட கருப்பையாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தன்வந்த் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றதாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்த பிறகு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313 (1)(ஆ) ன் படி வினவிய போது எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார்கள். அதனால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8. **இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் 1 மற்றும் 2 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. இவ்வழக்கில் கடந்த 17.09.2023 ம் தேதி 13.00 மணியளவில் புகார்தாரர் அவர் வீட்டிற்கு நடந்து போய்க்கொண்டிருக்கும் போது குடும்ப பிரச்சனையில் ஏற்பட்ட முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, அங்கு கையில் கட்டை மற்றும் கம்புகளுடன் போன 1 மற்றும் 2 எதிரிகள் புகார்தாரரின் வீடு அருகே வைத்து புகார்தாரரை வழிமறித்து புகார்தாரரை பார்த்து தேவிடியா மகனே தாயோழி மகனே என்று அசிங்கமாக பேசியதாகவும், அப்போது புகார்தாரர் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கோபமடைந்த 1வது எதிரி வேலு கட்டைகம்பால் புகார்தாரரின் இடது பக்க கழுத்திலும், இடது கை மணிக்கட்டிலும், அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 2 வது எதிரி சசிக்குமார் புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு வயிற்றில் மிதித்து கையால் முதுகில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும், பின்னர் எதிரிகள் இருவரும் கையில் வைத்திருந்த கம்பு மற்றும் உருட்டு கட்டைகளை புகார்தாரர் முன்னாடி காட்டி இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்ன கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு மீண்டும் அவர்கள் கீழே கிடந்த பெரிய கற்களை எடுத்துக்கொண்டு நாங்க அடித்ததை காவல் துறையினரிடம் கூறினால் கல்லை உன்மேல் போட்டு உன்ன கொன்று விடுவோம் என்று அவருக்கு கொலைமிரட்டல் செய்து உயிர்பயம் ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

11. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 கருப்பையா அவரது சாட்சியத்தில், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம்

ஏற்பட்டதாகவும், அப்போது கூட்டமாக அனைவரும் கூடிவிட்டார்கள் என்றும், கூட்டத்தில் யாரோ அவரை தள்ளிவிட்டதில் அவர் கீழே விழுந்து இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் தான் அவரை தள்ளிவிட்டார்கள் என்று நினைத்துக்கொண்டு எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும், பின்னர் எதிரிகள் அவரை தாக்கவில்லை என்று தெரிந்து கொண்டதாகவும், எதிரிகளுக்கும், அவருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானம் ஆகிவிட்டதாகவும், புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், கோபத்தில் அவ்வாறு புகார் கொடுத்துவிட்டதாக அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் அ.சா.1 அரசு தரப்பிற்கு பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என பிற பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு தற்போதைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.2. தமிழ்மோகன் விசாரிக்கப்பட்டுள்ளார்.

13. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது அ.சா.1 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்த அ.சா.2. சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும் இவ்வழக்கில் அசா.1 எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இவ்வழக்கில் உள்ள குற்றப்பிரிவுகள் சமாதானம் செய்ய இயலாத குற்றப்பிரிவுகள் என்பதனால் மேற்படிமனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒப்பிட்டு பரிசீலிக்கும் போது முரண்பாடு ஏற்படுவதாலும் இவ்வழக்கின் கண்ணுற்ற மற்றும் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக எந்த ஒரு சாட்சிய-மும் அளிக்காதபட்சத்தில் அரசு தரப்பு வழக்கின் மீது தோன்றும் சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. **முடிவாக, 1 மற்றும் 2 எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால், 1 மற்றும் 2 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

16. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 12 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,
அருப்புக்கோட்டை.

**பின் இணைப்பு :-**

**1) அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1. | கருப்பையா |
| அ.சா.2. | தமிழ்மோகன் ( சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார் மனு |
| அ.சா.ஆ.2. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3. | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.4. | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | எதிரிகள் நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ( கருப்பையா) |

**3) அரசு தரப்பு சான்றுபொருட்கள்** இல்லை

**4) எதிரி தரப்பு சான்றாவணங்கள்** இல்லை.

**<u>பின் குறிப்பு</u>**

| | |
|---|---|
| 1. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |
| 2. | வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை. |

D JEYAPRADHA
Digitally signed by D JEYAPRADHA

**நீதித்துறை நடுவர்,**

**அருப்புக்கோட்டை.**